**செய்தி வெளியீடு எண்.879** **நாள்.20.10.2008**

செய்தி வெளியீடு

தமிழக கலைக்குழு இமாச்சலப்பிரதேச மாநிலத்தில் நடத்திய தமிழக கிராமிய கலை நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கை

சங்கீத நாடக அகடெமியின் மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்களை பரிமாற்றம் செய்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை நடத்திடும் திட்டத்தின் கீழ் இமாச்சலப்பிரதேச மாநிலத்திற்கு தமிழகத்தின் சார்பில் 09.10.08 முதல் 15.10.08 வரை நடைபெற்ற தசரா விழாவில் கலந்துகொள்ள ஒரு கலைக் குழு அனுப்பப்பட்டது. மதுரை முத்து தலைமையிலான 16 நாட்டுப்புறக் கலைஞர்களில், இருவர் கரகாட்டக் கலைஞர்கள், ஒருவர் காவடியாட்டக்கலைஞர், நால்வர் காளை, வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி, பொம்மை போன்ற முகமூடி அணிந்து ஆடும் கலைஞர்கள் (Mask Dancers), ஐவர் கிராமிய இசையான நாதஸ்வரம், நையாண்டி மேளம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளை இசைக்கும் கலைஞர்களாக இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரும் தமது திறமையான ஆட்டத்தினையும் இசையினையும் வெளிப்படுத்தினர்.

9.10.2008 அன்று மாலையில் குல்லுவில் (Kullu) இமாச்சலப்பிரதேச ஆளுநர் அவர்களால் உலகப் பிரசித்தி பெற்ற குல்லு தசரா விழா விளக்கேற்றி துவக்கி வைக்கப்பட்டது. அன்று தமிழக கலைக் குழுவினரின் முதல் நிகழ்ச்சி நிகழ்த்தப்பெற்றது. அந்நிகழ்ச்சியினை பல்லாயிரக் கணக்கானோர் கண்டு களித்து பெரிதும் பாராட்டினர். அம்மாநில பத்திரிக்கைகளிலும் புகைப்படங்கள் வெளிவந்தன. 10.10.2008 அன்று இரண்டாவது கலை நிகழ்ச்சி மணிக்கரன் (Manikaran) என்னுமிடத்தில் உள்ள கோவிலிலும், 12.10.2008 அன்று பர்மானா (Barmana) என்னுமிடத்தில் அமைந்துள் ACC சிமெண்ட் தொழிற்சாலை வளாகத்திலும், 13.10.2008 அன்று கோலன் மாவட்டம் டார்லகாட் (Darlaghat) என்னுமிடத்தில் அமைந்துள்ள Ambuja Cement தொழிற்சாலை வளாகத்திலும் தமிழக கிராமியக்கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதை அப்பகுதி

மக்கள் கண்டு களித்து வியந்து பாராட்டினார்கள்.15.10.2008 அன்று சிம்லாவில் ஐந்தாவது கலை நிகழ்ச்சி நடத்தப் பெற்றது. அதில் அம்மாநில வனத்துறை அமைச்சர் தலைமையேற்று தமிழக மயிலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரைகள் ஆட்டம், முகமூடி ஆட்டம் , ஒக்களி ஆட்டம், நாதஸ்வரம், தவில், பம்பை இசைக் கருவிகளின் இசைநயத்தினையும் கலை நிகழ்ச்சியையும் ஆரம்பம் முதல் முடிவு வரை பொதுமக்களுடன் அமர்ந்து பார்த்து இரசித்து கலைஞர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

(வெ.இறையன்பு)
அரசு செயலாளர்
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**